

சேலம் மாவட்டம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மற்றும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய அலுவலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது DRO, RDO, மாவட்ட வேலை வாய்ப்பு துறை மண்டல இயக்குனர் லதா , தொழிலாளர் நலத்துறை இணை இயக்குனர்கள் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### ‘கலைஞர் 100 வினாடி வினா’ இறுதிப்போட்டி: முதல்வர் பரிசு வழங்குகிறார்!

# கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணியினர் திரண்டு வாரீர்!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் – நாமக்கல் பா.இராணி வேண்டுகோள்!

சென்னை, நவ.21-

கழக மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் பா.ராணி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் முன்னெடுப்பில் தி.மு.க. மகளிர் அணி சார்பில் திராவிட இயக்க வரலாறு, தி.மு.க.வின் வரலாறு, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் மாபெரும் அறிவுத் திருவிழா கலைஞர் 100 வினாடி வினா போட்டி 12 மண்டலங்களாக நடைபெற்றது.

வரும் நவம்பர் 22ஆம் தேதி அரையிறுதி போட்டி. 23 ஆம் தேதி மாபெரும் இறுதிப் போட்டி அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

தொடக்க உரையை கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பனும் வரவேற்புரையை கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சனும், நன்றியுரையை கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.இராணியும் ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை கோவி லெனின் தொகுத்து வழங்குகிறார்.

இதில் அமைச்சர் பெருமக்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். அனைவரும் வருகை தர அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் - “ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்!”

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், நவ.21-

பெரம்பலூர் மாவட்டம் துறைமங்கலம் குழந்தைகள் நல மையத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள் துறையின் சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் “ஊட்டச்சத்தை உறுதி செய்” இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

தமிழ் நாட்டில் 06 வயது வரையுள்ள குழந்தைகளில் பலரும் ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்களாக இருப்பதைத் கண்டறிந்து, மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தை களுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டமும் வழங்கிட வேண்டும என்ற நோக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.05.2022 அன்று “ஊட்டச்சத்தை உறுதி செய்” என்னும் சிறப்பு வாய்ந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

அரசின் முதற்கட்ட தீவிர முன்னெடுத்தல் காரணமாக 0 முதல் 6 வயதுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கி யம் வியக்கத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு டைய குழந்தைகளில் 77.3% குழந்தைகள் இயல்புநிலைக்கு திரும்பி யுள்ளனர். இது அரசின் மிகப்பெரும் சாதனையாகும்.

இதனைத் தொடர்ந்து, தற்போது இரண்டாவது கட்டமாக “ஊட்டச்சத்தை உறுதி செய்” திட்டத்தினை 15.11.2024 அன்று அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் துறை மங்கலம் குழந்தைகள் நல மையத்தில், பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 25 எடைக்குறைவாக பிறந்த குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஆவின் நெய் (500 மி.லி1), பேரீச்சம்பழம் (500 கிகி2), சிறப்பு உணவு ஆரோக்கிய கலவை (Protein Powder) (500 கிகி2), இரும்புச் சத்துக் கரைசல் (3 பாட்டில்), குடற்புழு நீக்க மாத்திரை, துண்டு(1), கப்(1), கூடை(1) ஆகியவை அடங்கிய ஊட்டச் சத்து பெட்டகத்தினையும், குழந்தைகள் மையத்தில் இருந்த குழந்தை களுக்கு சத்து உருண்டைகளையும் போக்குவரத்துத்துறை அமைச்சர் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் வழங்கினார்.

மேலும், 06 மாத குழந்தைகளுக்கு திட உணவு வேறு ஏதுமின்றி தாய்ப்பால் மட்டுமே வழங்கப்படுவதால் தாய்மார்களின் ஆரோக்கியத்தை பேணுவது அத்தயாவசியமாகிறது. 06 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை யின்படி, மாநிலம் முழுவதும் 26,215 குழந்தைகள் கடும் ஊட்டச்சத்து குறைபாட்டி லும், 50,490 குழந்தைகள் மிதமான ஊட்டச்சத்து குறைபாட்டிலும் உள்ளார்கள் என கண்டறியப் பட்டுள்ளது.

இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் 330 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடனும் 594 குழந்தைகள் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுடனும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இக்குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மேம்படுத்துவதற்காக ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப் படுகிறது.

வலிமையான குழந்தைகளை வளர்க்க வேண்டும், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களை காத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்தை தாய்மார்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என போக்குவரத்துத் துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் அலுவலர் ஜெயஸ்ரீ, பெரம்பலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பா. துரைசாமி, குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் பிரேமா (பெரம்பலூர்), அருணா (வேப்பந்தட்டை), பூமா (வேப்பூர்), பெரம்பலூர் வட்டாட்சியர் சரவணன், குழந்தைகள் நல மைய அமைப்பாளர்கள், பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# விருதுநகர் வடக்கு மாவட்டம் - சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன், எம்.பி., அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் விருதுநகர் வடக்கு மாவட்ட சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சிவகாசி மாநகரம்**

அமைப்பாளர் — எம். விஜயகுமார், 23, எ,வி.டி. புதூர்தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

துணைஅமைப்பாளர்கள் 1) ஆர். வைரமுத்து. 10/பி, வடக்கு மாடவீதி, திருத்தங்கல், விருதுநகர். 2) கி. முத்துராஜ். 368/எ1. கருணாநிதி காலனி, திருத்தங்கல், விருதுநகர். 3) ப. வசந்தகுமார். 62, அருண்நகர், விளாம்பட்டி ரோடு,சிவகாசி, விருதுநகர். 4) பி. மைக்கேல். 86/பி, பாண்டியன்நகர், 6வது ரோடு, சிவகாசி, விருதுநகர். 5) ப ஜோதி. முத்துமாரியம்மன் காலனி, பள்ளப்பட்டிதெரு, திருத்தங்கல், விருதுநகர்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள்- 20.11.2024

**தயாநிதிமாறன், எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி



2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பாக கழக வேட்பாளராக திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதை தொடர்ந்து கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி, கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆராஞ்சி, சோமாசிபாடி, கடம்பை, சோ.நம்மியந்தல், ஐங்குணம், காணலாபாடி, கழிக்குளம், கனபாபுரம், வழுதலங்குணம், மேக்களூர், செவரப்பூண்டி, கீக்களூர், கத்தாழம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் வாக்களித்து வெற்றி பெறச் செய்த மக்களுக்கு தமிழ்நாடு சட்டபேரவைத் துணைத்தலைவர் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கு.பிச்சாண்டி தலைமையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை நன்றி தெரிவித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் ஆராஞ்சி ஆறுமுகம், இரா.ராஜேந்திரன், ஒன்றிய குழு தலைவர் பூ.அய்யாகண்ணு, ஒன்றிய குழு துணைத் தலைவர் வாசுகி ஆறுமுகம், ஒன்றிய துணை செயலாளர்கள், இரா.சிவக்குமார், பரசுராமன், மாவட்ட பிரதிநிதி தேவேந்திரன், மா.குப்புசாமி, இளைஞரணி அமைப்பாளர் இரா.சதிஷ்குமார், கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# வேலூர் மாவட்டம் முழுவதும் பொதுக்கூட்டம் - தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அறிவிப்பு!



கழக இளந்தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டம் முழுவதும் பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிவிப்பு

| நாள் | பேச்சாளர்கள் | அமைப்பு |
|---|---|---|
| 27.11.2024 | 1. குத்தாலம் க.அன்பழகன் வே.ஆர்த்தி | பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம் |
| | 2. களூர் முரளி தா.ஜெயபாரதி | குடியாத்தம் மேற்கு ஒன்றியம் |
| | 3. வயலூர் கிருஷ்ணமூர்த்தி கா.செல்வமணி | கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியம் |
| 28.11.2024 | 1. ஈரோடு இறைவன் க.முல்லைவேந்தன் | குடியாத்தம் வடக்கு ஒன்றியம் |
| | 2. பொன்னேரி சிவா முனைவர் எம்.திவ்யா | பேர்ணாம்பட்டு நகரம் |
| | 3. வயலூர் கிருஷ்ணமூர்த்தி கா.செல்வமணி | கீ.வ.குப்பம் மத்தியம் ஒன்றியம் |
| 29.11.2024 | 1. களூர் முரளி அப்துல்வகாப் | பேர்ணாம்பட்டு மேற்கு ஒன்றியம் |
| | 2. பொன்னேரி சிவா கீர்த்தனா | குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் |
| | 3. கந்திலி கரிகாலன் வேல்முருகன் | கீ.வ.குப்பம் கிழக்கு ஒன்றியம் |
| 30.11.2024 | 1. கந்திலி கரிகாலன் இன்பதமிழன் | குடியாத்தம் தெற்கு ஒன்றியம் |
| | 2. பசும்பொன் ரவிச்சந்திரன் தே.சிலம்பரசன் | பள்ளிகொண்டா பேரூர் |
| 01.12.2024 | 2. எழும்பூர் கோபி செ.ஜோதி | திருவலம் பேரூர் |
| | 3. வரகூர் காமராஜ் வி.தினேஷ் | கஸ்பா பகுதி |
| 02.12.2024 | 1. நெல்லிக்குப்பம் புகழேந்தி மோகநிதி | காட்பாடி வடக்கு ஒன்றியம் |
| | 2. முரசொலி மூர்த்தி இரா.தமிழ்வாணன் | காந்திநகர் பகுதி |
| | 3. சேப்பாக்கம் பிரபாகரன் தமிழரசி | காட்பாடி கிழக்கு ஒன்றியம் |
| 03.12.2024 | 1. புதுக்கோட்டை விஜயா முத்துபாண்டி | வாலாஜா மேற்கு ஒன்றியம் |
| | 2. தூத்துக்குடி சரத்பாலா தங்கமுத்து | காட்பாடி தெற்கு பகுதி |
| | 3. ஈரோடு இளையகோபால் மா.பூபதி | காட்பாடி மேற்கு ஒன்றியம் |
| 04.12.2024 | 1. புதுக்கோட்டை விஜயா வேல்முருகன் | காட்பாடி தெற்கு ஒன்றியம் |
| | 2. தூத்துக்குடி சரத்பாலா தமிழ்இனியன் | சத்துவாச்சாரி வடக்கு பகுதி |
| | 3. திருப்பூர் மனோகர்பாபு மு.ராமச்சந்திரன் | சைதாப்பேட்டை பகுதி |
| 05.12.2024 | 1. பவானி கண்ணன் மா.க.சூரியா | சத்துவாச்சாரி தெற்கு பகுதி |
| | 2. சேலம் சுஜாதா நா.கதிரவன் | சலவன்பேட்டை பகுதி |
| | 3. ஆரணி மாலா நா.சத்தியபிரியன் | வேலப்பாடி பகுதி |
| 09.12.2024 | 1. சைதை சாதிக் கே.தமிழரசன் | கணியம்பாடி தெற்கு ஒன்றியம் |
| | 2. ஆடுதுறை உத்திராபதி பேரரசன் | சங்கரன்பாளையம் பகுதி |
| | 3. குடந்தை ரமேஷ் வே.சீனிவாசன் | அல்லாபுரம் பகுதி |
| 10.12.2024 | 1. சைதைசாதிக் கவின்குமார் | பென்னாத்தூர் பேரூர் |
| | 2. திருப்பூர் ரஜினி செந்தில் கனிமொழி | அணைக்கட்டு மேற்கு ஒன்றியம் |
| | 3. குடந்தை ரமேஷ் எஸ்.ஏ.மாறன் | வேலூர் ஒன்றியம் |
| 11.12.2024 | 1. ஆலந்தூர் ஒப்பிலாமணி நா.அருண் | ஒடுக்கத்தூர் பேரூர் |
| | 2. ஆரூர் மணிவண்ணன் முனைவர்.எம்.திவ்யா | அணைக்கட்டு மத்திய ஒன்றியம் |
| | 3. போடி காமராஜ் சூரிய பிரகாஷ் | தொரப்பாடி பகுதி |
| 12.12.2024 | 1. நாகை நாகராஜன் மா.ஜ.சந்தீப் | அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் |
| | 2. சேலம் கோவிந்தன் முகமது சபீர் | |
| 13.12.2024 | 1. பொன்னேரி சிவா கா.செல்வமணி | பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் |

நடைபெற உள்ள பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சார கூட்டங்களில் மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர் மற்றும் நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்டதிற்கு உட்பட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு மற்றும் ஊர்கிளை நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக இந்நாள்,முன்னாள் நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்துடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே அட்டவணைப்படி அறிவிக்கப்படும் தேதிகளில் அந்தந்த அமைப்பிற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் ஏற்பாடுகளை செய்து கூட்டம் சிறப்பாக நடைபெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர், வேலூர் மாவட்ட தி.மு.க.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் சிறுபான்மையின மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறுபான்மை ஆணையத் தலைவர் அருட்தந்தை சோ.ஜோ. அருண், துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

